# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினுக்கு மரக்காணத்திலும் - கடலூரிலும் கழகத்தினர் எழுச்சிமிகு வரவேற்பு!







கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (24.06.2026), புதுச்சேரி மற்றும் திருவாரூரில் கழகத் தோழர்கள் இல்ல மணவிழாக்களில் பங்கேற்றிட சென்ற போது, மரக்காணத்திலும், கடலூரிலும் கழகத்தினர், பொதுமக்கள் ஏராளமானோர் வழிநெடுகிலும் திரண்டு வரவேற்பளித்தனர்.

### தமிழ்நாட்டை விரும்பிய தமிழர்கள் விரும்பிய பிரதமர்!

## வடக்கே உதித்த சமூக நீதிக்காவலர் வி.பி.சிங்!

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் புகழாரம்!

சென்னை, ஜூன் 26-

முன்னாள் பிரதமர் வி.பி.சிங் அவர்களின் பிறந்தநாளையொட்டி, கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பக்கத்தில் தமிழ்நாட்டை விரும்பிய, தமிழர்கள் விரும்பிய பிரதமராகத் திகழ்ந்தார் என்றும் வடக்கே உதித்த சமூக நீதிக் காவலர் என்றும் பாராட்டியுள்ளார்.

அவரது சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**திராவிட இயக்கம் தோன்றாத வடக்கே உதித்த சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களின் பிறந்தநாள்!**

**இந்தியா எத்தனையோ பிரதமர்களைக் கண்டிருக்கிறது. குறுகிய காலமே அப்பதவியில் இருந்தாலும் சமூகநீதியை நிலைநாட்டுவதற்காகப் பிரதமர் பதவியையே துச்சமாகக் கருதி வி.பி.சிங் அவர்கள் காட்டிய உறுதி என்றென்றும் நாம் நினைத்துப் போற்றத்தக்கது.**

**தி.மு.க.வைப் போலவே, 'ஆட்சியும் பதவிகளும் முக்கியமல்ல; சமூக நீதிக் கொள்கையே முக்கியம்' என வாழ்ந்து காட்டியவர் வி.பி.சிங் அவர்கள். தமிழ்நாட்டை விரும்பிய, தமிழர்கள் விரும்பிய பிரதமராகத் திகழ்ந்தார்.**




**நெருக்கடியான சூழலிலும் தலைவர் கலைஞருக்குத் தோள் கொடுத்த உண்மையான கொள்கைத் தோழமையான அவருக்கு என் வீரவணக்கம்!**

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

### முதல்வர் மீது அவை உரிமை மீறல் :

## நடவடிக்கை எடுப்பாரா பேரவைத் தலைவர்?

### முன்னாள் பேரவைத் தலைவர் மு.அப்பாவு கேள்வி!

நெல்லை, ஜூன் 26-

அவையில் இல்லாத ஒருவரை பற்றி நேரடியாகவோ, மறைமுகமாகவோ உறுப் பினர்கள் விமர்சனம் செய்யக்கூடாது.என தெரிந்தும் அவ்வாறான செயலில் ஈடு பட்ட முதல்வர் விஜய் மீது அவை உரிமை மீறல் நடவடிக்கையை சட்டப் பேரவை தலைவர் எடுப்பாரா.என முன்னாள் சட்டப்பேரவை தலைவர் மு. அப்பாவு கேள்வி எழுப்பியுள்ளார்.



முன்னாள் பேரவை தலைவர் மு.அப்பாவு தனது எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு சட்டப்பேரவை விதிப்படியும் மரபுபடியும் பேரவையில் இல்லாத ஒருவரை பற்றி நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சட்ட மன்ற உறுப்பினர்கள் வாய்மொழியாகவோ அல்லது உடல் மொழியாகவோ விமர்சனமோ அல்லது கிண்டலோ, கேலியோ செய்யக் கூடாது என்பது சட்டப் பேரவை தலைவருக்கு தெரிந்திருக்கும்.

இது தொடர்பாக 22.6.2026 அன்று சட்டப் பேரவைத்தலைவர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினர்கள் உடல் மொழியாக அல்லது வாய்மொழியாக யாரையும் கிண்டலும், கேலியும் செய்யக்கூடாது என்று உத்தரவு பிறப்பித்த அடுத்த நாளே (23.6.2026) இதே போல் வாய்மொழியாகவும், உடல் மொழியாகவும் அவையில் இல்லாத (முன்னாள் முதல்வர் மு.க.ஸ்டாலின்) குறித்து தமிழக முதலமைச்சர் கிண்டலும்,கேலியும் செய் தது அவை உரிமை மீறல் இல்லையா? அவ்வாறான செயலில் ஈடுபட்ட முதல்வர் மீது தாமாக முன்வந்து அவை உரிமை மீறல் நடவடிக்கையை பேரவைத் தலைவர் எடுப்பாரா? தானே முதலமைச்சருக்கு இதுபோல் செயல்பட அனுமதித்தது நியாயமா? பதிலை எதிர் பார்த்து தமிழ்நாடே காத்திருக்கிறது, பேரவை தலைவரே.!இவ்வாறு முன்னாள் பேரவை தலைவர் மு.அப்பாவு எக்ஸ் வலை தளத்தில் கேள்வி எழுப்பி உள்ளார்.



2001 இல் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களை அன்றைய ஆளுங்கட்சி அ.தி.மு.க. கைது செய்ததை கண்டித்து மதுரை மாநகர் மாவட்டத்திற்கு உட்பட்ட கழக நிர்வாகிகளான ஏழு பேர்ஆர்ப்பாட்டத்தில் மதுரையில் கைது செய்யப்பட்டு அந்த வழக்கு கிட்டத்தட்ட 25 வருடங்கள் நடைபெற்று தற்போது அதில் நான்கு ஆண்டு தண்டனை வழங்கி கிட்டத்தட்ட 15 நாட்களுக்கு முன்பு மத்திய சிறையில் கழகத்திற்காக சிறை சென்ற நிர்வாகிகளான மதுரை மாநகர் மாவட்டம் ஆரப்பாளையம் பகுதி கழக செயலாளர் எஸ் எஸ் மாறன் மற்றும் மேலமாசி வீதி பகுதி கழக துணை செயலாளர் எஸ் கணேசன் மற்றும் மதுரை மாநகர் மாவட்ட மீனவர் அணி துணை அமைப்பாளர் கோபாலகிருஷ்ணன் மூவரும் விடுவிக்கப்பட்ட அனைவரும் மதுரை மாநகர் மாவட்ட கழக செயலாளர் கோ. தளபதியைச் சந்தித்த வாழ்த்துப் பெற்றனர்.